**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - 2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் டாக்டர். அம்பேத்கர் விருது வழங்குதல் விருதுக்காக ரூபாய் ஒரு இலட்சமும் இதர செலவினங்களுக்காக ரூ.25,000/- ம் சேர்த்து ரூ.1,25,000/- வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கொடுதடு) துறை

அரசு ஆணை (நிலை) எண். 112
நாள் 16.09.2004

படிக்க

1 அரசு ஆணை நிலை எண்.52 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள் 22.3.96
2 அரசு ஆணை நிலை எண்.101 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள் 14..12.2001
3 அரசு ஆணை (நிலை)எண்.30, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை , நாள் 23.01.2003
4 அரசு ஆணை (நிலை)எண்.2, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள் 08.01.2004
5 ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையரின் கடிதம் எண்.ஆ2/24901/2004 நாள் 16.09.2004.

*********

ஆணை

ஆதிதிராவிடர்களின் முன்னேற்றத்திற்காக தொண்டாற்றி வரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு தமிழ்நாடு அரசின் டாக்டர் அம்பேத்கர் விருது வழங்கவும் ஒரு ஆண்டிற்கு ஒருவர் என தேர்ந்தெடுக்கப்படும் நபருக்கு நற்சான்றிதழும், ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்)- த்திற்கான (பொற்கிழி) காசோலை வழங்கிடவும் அரசாணை 1 ல் ஆணை பிறப்பிக்கப்பட்டு இத்திட்டம் ஒவ்வொர் ஆண்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2. கடந்த 2002 மற்றும் 2003-ஆம் ஆண்டிற்கான டாக்டர். அம்பேத்கர் தமிழ்நாடு அரசு விருது வழங்க படிக்கப்பட்ட அரசாணை 3 மற்றும் 4-ல் ஒரு இலட்ச ரூபாய்க்கான காசோலையும் , ஒரு சவரன் தங்கப்பதக்கமும் மற்றும் இதர செலவினத்தை மேற்கொள்வதற்காக ரூ.25,000/-(ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) சேர்த்து மொத்தம் ரூ.1,25,000/-

(ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும் ) முன்பணமாக வழங்கி தனித்தனியாக ஆணை வெளியிடப்பட்டது.

3. ஆதிதிராவிடர் நல ஆணையர் மற்றும் இயக்குநர், படிக்கப்பட்ட தனது கடித எண் ஐந்தில், 2004- ஆம் ஆண்டிற்கான டாக்டர் அம்பேத்கர் விருதுக்கான தகுந்த நபரை தெரிவு செய்து பொதுத்துறை அனுப்பியுள்ளது என்றும், மேற்படி விருதிற்கான செலவினங்களை மேற்கொள்ள ரூ.1.25 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்க ஆணையிடுமாறும், மேலும், சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பின் கீழ் இச்செலவினத்திற்கு தேவையான தொகை ஒதுக்கப்படவில்லை என்பதால் அத்தொகையை 2004 - 2005 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் சேர்த்து வழங்க ஆணையிடுமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் மற்றும் இயக்குநர் அரசிற்கு முன்மொழிவினை அனுப்பியுள்ளார். இம்முன்மொழிவு அரசால் பரிசீலக்கப்பட்டு 2004 ஆம் ஆண்டிற்கான டாக்டர் அம்பேத்கர் விருது வழங்குவதற்கான செலவினம் ரூ.1.25 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேற்குறித்தச் செலவினம் கீழ்க்கண்ட கணக்குத்தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2225 ஆதிதிராவிடர் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலம் -01 ஆதிதராவிடர் நலன் - 800 ஏனைய செலவு - பத்தாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் II மாநில திட்டம் - LX ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலனை மேம்படுத்துபவர்களுக்கு டாக்டர் அம்பேத்கர் பரிசு - 59 பரிசுகளும் வெகுமதிகளும்( த. .தொ கு. 2225-01-800 LX 5908 )

5. 2004 - ஆம் ஆண்டிற்கான டாக்டர். அம்பேத்கர் விருதினை சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. ஆ. சக்திதாசன் அவர்களுக்கு வழங்கலாம் என அரசு முடிவெடுத்துள்ளது.

6. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள ரூ.1.25.000/- (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) தொகையை பெற்று செலவிடுவதற்கு ஆதிதிராவிடர் நல ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. மேலும், மேலே ஒப்பளிக்கப்பட்ட தொகைக்குள் இச்செலவினத்தை மேற்கொள்ளும்படியும், இச்செலவினத்திற்கு தேவையான தொகையான ரூ.1,25,000/- த்தினை 2004-2005 ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்திய மதிப்பீடுகளுக்கான 2003-2004 கருத்துரையை அரசுக்கு அனுப்பிடும்பொழுது சேர்த்து அனுப்பும்படியும் ஆதிதிராவிடர் நல ஆணையர் மற்றும் இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இக்கூடுதல் செலவினத்திற்கு தேவையான தொகையான ரூ.1.,25,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம்) -த்தை 2004-2005 ஆம் ஆண்டிற்கான திருத்திய / இறுதி திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கப்படும். மேற்படி தொகை ஒதுக்கீடு செய்வதை எதிர்நோக்கி சம்பந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து சமர்ப்பிக்கப்படும் பட்டியல் சரியாக இருக்கும் பட்சத்தில்,

அப்பட்டியலை ஏற்று அனுமதிக்கும்படி சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறை அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 635/து.செ.(வி.என்.பி)/2004- நாள் 16.09.2004 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப்பேரேடு எண். 674.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம். அபுல் ஹாசன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

திரு. ஆ. சக்திதாசன், த/பெ ஆபிரகாம், 24, 'A'பிளாக், எம். எஸ். நகர், சேத்துப்பட்டு, சென்னை-31
ஆணையர் மற்றும் இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை 5
சம்பளம் மற்றம் கணக்கு அலவலர் (கிழக்கு), சென்னை-5
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-5
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-35
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-9
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-9 (பெயரில்)
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-18 (பெயரில்)
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-35 (பெயரில்)
பொது (பொது-1) துறை, சென்னை-9
நிதித்துறை, ச.ந. / ( வரவு-செலவு (பொது-II) ) சென்னை-9
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் அவர்களின் தனிச் செயலர் , சென்னை-9
மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9